# ஸஹ்ரானின் கொள்கையை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சி? காத்தான்குடியில் ஒன்றுகூடிய 30 பேர் பொலிசாரால் கைது!

## உயிர்த்த ஞாயிறு வழக்கில் பிணையில் வந்தோரும் அடக்கம்



காத்தான்குடியில் வீடு ஒன்றில் ஒன்று கூடிக் கூட்டமொன்றை நடத்திய 30 பேரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த ஸஹ்ரான் ஹாசிமின் சாகோதரியின் கணவர் உள்ளிட்ட 5 பேர் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பாலமுனை பகுதியிலுள்ள பள்ளிவாசல் ஒன்றிற்கு அருகாமையிலுள்ள வீடு ஒன்றில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் கைதுசெய்யப்பட்டவர்கள் ஸஹ்ரான் ஹாசிமின் கொள்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ஒன்று கூடினார்களா? என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், விசாரணையின் பின்னர் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (04)


# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 18 வெள்ளிக்கிழமை 01.03.2024 கதிர் 193



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




## புற்று நோய் மருந்துகளில் 60 வீதமானவை பதிவு செய்யப்படாதவை மருந்துகளுடன் போதைப் பொருட்களும் நாட்டிற்குள் கடத்தலாம்!

*மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சந்திக கங்கந்த தெரிவிப்பு*



புற்று நோயாளர்களுக்காக இறக்குமதி செய்யப்படும் மருந்துகளில் 60 வீதமானவை பதிவு செய்யப்படாத நிறுவனங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாக அகில இலங்கை மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சந்திக கங்கந்த தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவித்த அவர், புற்றுநோய்க்கான மருந்துகளை கொள்வனவு செய்யும் போது அந்த மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட மருந்தா என்பதை உறுதிப்படுத்தி விட்டே கொள்வனவு செய்ய வேண்டும். இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் நிர்ணயிக்கப்பட்ட 2➤

## பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சிறுவன் தன்வந்த் சாதனை படைப்பு!



திருகோணமலையைச்சேர்ந்த 13 வயதுடைய தன்வந்த் என்னும் சிறுவன் பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளான். தமிழ்நாட்டின் 2➤

## ஸ்ரீலங்கன் விமான சேவை 5 ஆம் திகதி ஏலம் விடப்படும்! தரமான சேவையை வழங்க முடியும் என்கிறார் நிமால்

*காலை 10 முதல் பி.ப 2 மணி வரை விலைமனுக்கள் ஏற்பு*



நிறுவனத்தை பராமரிப்பதற்கு மேலும் பணம் இல்லாததால், ஸ்ரீ லங்கன் விமான சேவையை முதலீட்டாளர் ஒருவருக்கு விற்பனை செய்வதற்கான ஏலம் விடுதல் எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, முதலீட்டாளர்கள் 5ஆம் திகதி (செவ்வாய்) காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம் எனவும், விலைமனுக்களை திறந்து மதிப்பீடு செய்வதற்கு தொழில்நுட்ப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், விலைமதிப்பீட்டு அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். 2➤

## சாந்தனின் பூதவுடல் வந்தது இலங்கைக்கு நாளைமறுதினம் உடுப்பிட்டியில் இறுதிக்கிரியை



சென்னையில் உயிரிழந்த ஈழத்தமிழன் சாந்தனின் (தில்லையம்பலம் சுதேந்திரராஜா) பூதவுடல் இன்று நண்பகல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது. அவரது பூதவுடல் கொழும்பில் இருந்து தரை வழியாக யாழ்ப்பாணம் கொண்டு வரப்படவுள்ளது.

இந்நிலையில், சாந்தனின் பூதவுடல் வழமையான பயணிகள் விமானத்தில் இலங்கைக்கு எடுத்து 2➤

# ஆசையோடு தேசம் காண இருந்தவருக்கு இந்திய அதிகாரம் எமனாகிப்போனது!

*யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை*

"தமிழர் தேசக் கனவோடு தாயகம் பிரிந்து, இந்திய ஒன்றியத்தின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு, முழுமை பெறாத நீதி விசாரணையால் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏழு தமிழர்களில் ஒருவராக 33 ஆண்டுகள் சிறைவாழ்வை அனுபவித்து தாயகம் காணக் காத்திருந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜா எனும் இயற்பெயருடைய சாந்தன் விரைவில் நாடு திரும்புவார் எனும் தமிழர்களின் எதிர்பார்ப்பும் தாயையும் தாய் மண்ணையும் காண வேண்டும் என்னும் இறுதி ஆசையும் நிறைவேறாமலேயே அவர் உயிர் பிரிந்த செய்தி தமிழர் இதயங்களைக் கனக்க வைத்துள்ளது."

- இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இன்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"பெற்ற மகனை ஒரு முறையாவது உயிருடன் பார்த்து விட வேண்டுமென்ற தாய்க்கும் - மகனுக்கும் இடையிலான 33 ஆண்டுகள் பாசப் போராட்டத்தில் சாந்தனின் இழப்பு அனைவரையும் வெடித்தழ வைக்கின்றது. மரணம் நிகழ்ந்த 28 ஆம் திகதி காலையில்கூட மகன் வருவான் என்று கோயில் தீர்த்தத்துடன் காத்திருந்த தாய்க்கு வாழ்நாள் 2➤

## பாடசாலைகளுக்கு பாடப் புத்தகங்களை கொண்டுவருவதைத் தவிர்க்க முயற்சி!

*கல்வி அமைச்சு நடவடிக்கை*

மாணவர்களுக்காக தயாரிக்கப்பட்ட பயிற்சிப் புத்தகங்கள் தவிர ஏனைய பாடப்புத்தகங்களை பாடசாலைக்கு கொண்டு வருவதைக் குறைக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக அதிபரின் நேரடிக் கண்காணிப்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கல்விச் செயலாளர் வசந்தா பெரேரா வழிகாட்டுதல்கள் சிலவற்றை வெளியிட்டுள்ளார்.

பாடசாலை புத்தகப் பையின் எடை அதிகரிப்பினால் பாடசாலை மாணவர்களுக்கு முதுகுத்தண்டு பாதிப்புகள் போன்ற பல்வேறு உடல் உபாதைகள் ஏற்படவாய்ப்புள்ளதாக சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனையடுத்து மாணவர்களின் புத்தகப் பைகளின் எடையைக் குறைப்பது தொடர்பாகக் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதோடு, அதன் ஒரு 2➤

# லிட்ரோ எரிவாயுவின் விலையில் மாற்றம் செய்யப்படமாட்டாது!




லிட்ரோ எரிவாயுவின் விலையில் மாற்றம் செய்யப்படமாட்டாது என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

மாற்றம் ஏதுமின்றி கடந்த மாத விலையினையே இம்மாதமும் பேணுவதற்கு அந்த நிறுவனம் முடிவு செய்துள்ளது.

மாதாந்த விலைத் திருத்தத்திற்கமைய எரிவாயுவின் விலை இன்று (01) முதல் நடைமுறைக்கு வரும் திருத்தம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

எனினும், மாற்றங்கள் எதுவும் இன்றி அதே விலையை இம்மாதத்திலும் பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (04)

## ஸ்ரீலங்கன் விமான .....

இதற்கமைய ஸ்ரீலங்கன் விமான சேவையை மறுசீரமைத்து பயணிகளுக்கு தரமான சேவைகளை வழங்கக் கூடியதாக இருக்கும் எனவும் அமைச்சர் சிறிபால நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ரெம-03)

## ஆசையோடு தேசம்.....

ஏக்கம் கனவாய்ப் போனது பெருந்துயர்!

ஏதும் அறியா இளைஞனாக தமிழகம் வந்தவரை மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாகச் சிறைப்படுத்தி, சித்திரவதை செய்து நீண்ட நெடிய சட்டப்போராட்டங்களின் பின்னர் 11.11.2022 ஆம் திகதி இந்திய ஒன்றிய உச்ச நீதிமன்றம் விடுதலை செய்த பின்னரும் இயற்கை நீதிக்கு முரணாக தொடர்ந்து 15 மாதகாலம் திருச்சி சிறப்பு முகாமில் தடுப்பில் வைத்திருந்து உடல், உள ரீதியாய் பலவீனப்படுத்தி சிறுகச் சிறுகச் கொன்று தாயையும் தாய் மண்ணையும் காண ஆவல் கொண்டிருந்தவரை இன்று உயிரற்ற சடலமாய் அனுப்பி வைத்திருக்கிறது இந்தியம்.

பாரத தேசத்தின் பிராந்திய நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டு தொடர்ந்தும் அவமதித்து வரும் இலங்கை அரசுடன் நட்புப் பாராட்டும் காந்தி தேசம், தங்களின் அற்ப பூகோள நலன்களுக்காகத் தங்களை நோக்கி என்றுமே நேசக்கரம் நீட்டும் ஈழத்தமிழ் மக்களைத் வஞ்சிப்பதென்பது அந்த நாடு இதுவரை காலமும் தான் கொண்ட வரலாற்றுக்கும் பெருமைகளுக்கும் இழுக்கானதாகும். அன்று முதல் இன்று வரை காந்தியின் பெயர்கொண்டு, புரியும் கொடூரங்களால் தனக்கு மேல் போர்த்திய போர்வை களைந்து நிர்வாணமாய் நிற்கின்றது காந்தி தேசம்.

29.02.2024 அன்று நடந்த நீதிமன்ற வாதங்களில் தமிழக அரசு வழக்கறிஞரின் கூற்றுப்படி தமிழக அரசே சாந்தனை விடுவிப்பதில் காலந்தாழ்த்தியது எனும் துயரச் செய்தி, எமக்காய் தமிழக உறவுகளும் தமிழக அரசும் நிற்பார்கள் என்று நம்பும் ஈழத்தமிழ் மக்களுக்குத் துரோகச் செய்தியாய்ப் போனது இன்னுமொரு பெருந் துயரம்!

சாந்தனைத் தாயகம் அழைத்து வருவதற்கு இறுதி ஒரு மாத காலத்துக்குள் காணப்பட்ட ஏதுநிலையைக் குறிப்பிட்ட சில காலங்களுக்கு முன்னதாகவேனும் உருவாக்கிட நடவடிக்கை ஏதும் எடுத்திருந்தால்கூட பெற்ற தாயைக் காண வேண்டும் எனும் இறுதி ஆசையையேனும் நிறைவேற்றிக் கொடுத்திருந்திருக்கலாம். ஆனால், ஏழு தமிழர்கள் இந்திய ஒன்றிய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட ஒன்றாண்டு காலப் பகுதிக்குள் ஈழத்தமிழ் அரசியல் தலைமைகள் கூட்டாக ஒரு தீர்க்ககரமான தீர்மானங்கள் எதனையும் மேற்கொள்ளாது, அசமந்தமாகவும் அலட்சியப்போக்குடனும் செயற்பட்டமை என்பது மன்னிக்க இயலாத கண்டனத்துக்குரியதொன்று.

நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் இயற்கை நீதிக்கு விரோதமாகச் சிறப்பு சித்திரவதை முகாம்களில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள எஞ்சியுள்ளவர்களையும் விடுதலை செய்து ஈழத்தமிழர்களை சிதைத்தெடுக்கும் சித்திரவதை முகாமுக்கு இனியாவது முடிவுரை எழுத இந்திய ஒன்றிய, மாநில அரசுகளை வேண்டுகின்றோம்.

ராஜீவ் காந்தி கொலையில் குற்றஞ்சாட்டப்பட்ட ஏனைய மூன்று ஈழத்தமிழர்களையும் அவர்கள் விரும்பும் இடங்களில் வசிப்பதற்கு அனுமதிக்க வேண்டுவதோடு, தாயகம் திரும்ப எவரேனும் விரும்பினால் அவர்களை அழைத்து வர இனியாவது உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஈழத்தமிழ் அரசியல் தரப்புக்களையும் சிறிலங்கா, இந்திய அரசுகளையும் வலியுறுத்துகின்றோம்.

நீதியைக் காத்து நிலைநாட்டுவதில் பக்கம் சாராமல் இந்திய உச்ச நீதிமன்றம் மரண தண்டனை விதிக்கப்பட்ட காலம் முதல் அவர்களின் விடுதலைக்கான காலம் வரையில் காலத்திற்குக் காலம் எத்தனையோ வாய்ப்புக்களை வழங்கியும் இந்திய ஒன்றிய அரசும் தமிழக அரசும் தொடர்ச்சியான சட்ட செயற்பாடுகளின் மூலம் தாமதப்படுத்தியமை என்பது ஈழத்தமிழ் மக்களின் மீதான கசப்புணர்வையே வெளிப்படுத்தியிருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. இனிமேலாவது ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளிற்கு விரோதமான செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, ஈழத்தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க உளச்சுத்தியுடன் இந்திய அதிகாரம் செயற்பட வேண்டுகின்றோம்.

உயிரோடு வந்தவரை இன்று உயிரற்று அனுப்பி வைத்துள்ளது பாரதம்! சாந்தனின் இறப்பு — காந்தி தேசத்தின் அவலக் குறியீடு!!" - என்றுள்ளது. (அ)

## பாடசாலைகளுக்கு.......

நடவடிக்கையாக தெரிவு செய்யப்பட்ட பாடப்புத்தகங்களை தொகுதிகளாக அச்சிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

## பாக்குநீரிணையை......

தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னார் வரை இவர் நீந்திக்கடந்துள்ளார்.

போதைப்பொருள் பாவனையைத் தவிர்த்தல் மற்றும் கடல் வளங்களைப் பாதுகாக்க கோரி- அவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இவர் இச்சாதனையை நிகழ்த்தி உள்ளார்.

இவர் சுமார் 31.05 கிலோமீற்றர் தூரத்தை எட்டு மணித்தியாலங்கள் 15 நிமிடங்களில் நீந்திக்கடந்துள்ளார்.

இவர் கிழக்கு மாகாணம் திருகோணமலை மாவட்டத்தில் தி-இ.கி.ச. கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் கல்வி பயினும் மாணவனாவார்.

குறித்த சிறுவனுக்கு யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் புதிய துணைத் தூதுவர், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உள்ளிட்ட பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர். (04)

## சாந்தனின் பூதவுடல் .......

வரப்பட்டுள்ளது என்றும், அவரது பூதவுடல் தனியார் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிறுக்கிழமை தமது இல்லத்தில் (வடமராட்சி - உடுப்பிட்டி) நடைபெறவுள்ளது என்றும் சாந்தனின் சகோதரர் மதிசுதா தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் கைதாகி 33 வருடங்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சாந்தன், பல போராட்டங்களின் பின்னர் தாயகம் திரும்பவிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் காலை சென்னை ராஜீவ் காந்தி அரச மருத்துவமனையில் மாரடைப்பால் உயிரிழந்தார்.

தனது தாயின் கையால் உணவு உண்ண வேண்டும் என்ற ஆசையில் காத்திருந்த மகன், பூதவுடலாக வந்துள்ளமை ஈழத்து மக்களைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. (அ)

## புற்று நோய் மருந்துகளில் ....

தரங்களுக்கு அமைய தயாரிக்கப்படுகிறதா என்பதை பரிசோதிக்கும் ஆய்வுகூடம் இலங்கையில் இல்லாததால், பதிவு செய்யப்படாத மருந்துகள் இலங்கையில் இறக்குமதியாவது அதிகரித்துள்ளது என குறிப்பிட்டார்.

மேலும், புற்று நோய்க்கான மருந்துகளை சட்டவிரோதமாக கடத்தி விற்பனை செய்யும் மோசடியும் நடைபெறுவதுடன், அவ்வாறானவர்களால் போதைப் பொருட்களும் நாட்டிற்குள் கொண்டு வரப்படுவதாக முறைப்பாடுகள் உள்ளதாகவும், பரிந்துரைக்கப்பட்ட வெப்பநிலை பேணாமை மற்றும் தேவையான பரிந்துரைகளுக்கு ஏற்ப அவை கொண்டு வரப்படாமை போன்ற குற்றங்களையும் இவர்கள் புரிந்துள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக புற்று நோய்க்கான மருந்துகளை சரியான வெப்பநிலையில் பராமரிப்பது மிகவும் முக்கியமானதாகும், எனவே அவற்றை குளிர்பதன களஞ்சியங்களில் வைத்து உரிய வெப்பநிலையை பேணியவாறே விற்பனை செய்ய வேண்டியது கட்டாயமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தரமற்ற மருந்துகளை பாவிப்பது நோயாளர்களுக்கு மிகவும் ஆபத்தானது, குறிப்பாக மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை சுற்று வட்டாரத்தில் இவ்வாறான சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் இடம்பெற்று வருவதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன, இவ்வாறு சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட மருந்தை விற்பனை செய்தமை தொடர்பில் ஏதேனும் மருந்து விற்பனை நிலையம் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்கள் சார்பில் வாதிட மருந்தக உரிமையாளர்கள் சங்கம் முன்வராது எனவும் சங்கத்தின் தலைவர் சந்திக கங்கந்த மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-01)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# மெய்வல்லுநர் தொழிநுட்ப அலுவலர் பரீட்சையில் கல்முனை ஸாஹிரா ஆசிரியர் இரண்டாம் இடம்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் நடத்தப்பட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் (Athletic Technical Official Grade - 2) தரம் மூன்றிலிந்து தரம் இரண்டுக்கான தரம் உயர்த்தல் பரீட்சையில் கல்முனை ஸாஹிரா கல்லூரி ஆசிரியர் சித்தியடைந்துள்ளார்.

குறித்த பாடசாலையின் ஆசிரியர் எம்.வை.எம். றகீப் அகில இலங்கை ரீதியில் சித்தியடைந்து பாடசாலைக்கும் பிராந்தியத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இதனடிப்படையில் எம்.வை.எம்..றகீப் 89 புள்ளிகளை பெற்று அகில இலங்கை ரீதியில் 2ஆம் இடத்தினைப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நிந்தவூரில் உலக புவி நாள்



( வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை நகர லயன்ஸ் கழகம் மற்றும் நிந்தவூர் சுப்ரீம் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து இந்த ஆண்டுக்கான புவி தினத்தை நிந்தவூரில் அனுட்டித்தன.

இந்த நிகழ்வின் போது மேற்கொள்ளப்பட்ட திட்டங்களில் கடற்கரையை சுத்தம் செய்தல், டெங்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரம் விநியோகம், புற்றுநோய் விழிப்புணர்வு துண்டு பிரசுரம் விநியோகம், பனை விதைகள் நடுதல், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வளாகத்தில் மரம் நடுதல் மற்றும் பங்கேற்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு 100 பலாச் செடிகள் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் அடங்கும். மேலும், டெங்குவை எதிர்த்துப் போராடுவதற்கும், பொலித்தீன் பெருக்கத்தைத் தடுப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கல்முனை லயன்ஸ் கழகத் தலைவர் எந்திரி.லயன் மதுரநாயகம் சுதர்சன் மற்றும் நிந்தவூர் சுப்ரீம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் அரூப் அர்ஷத் ஆகியோரின் திறமையான தலைமையின் கீழ், பல்வேறு சுற்றுச்சூழல் மற்றும் பொது சுகாதார பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஸ்ரீலங்கா லயன்ஸின் சுற்றாடல் தவிசாளர் முன்னாள் மாவட்ட ஆளுநர் ரொஷான் காஞ்சன யாப்பா நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்ட சமூக சேவை நிறுவனங்களின் கூட்டமைப்பு, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், நிந்தவூர் பிரதேச சபை, பிரதேச செயலகம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மினா விளையாட்டுக் கழகம், மதீன விளையாட்டுக் கழகம், ஸ்ரீலங்கா ஸ்மார்ட் யூத் விளையாட்டுக் கழகம், பிரதேச சம்மேளன விளையாட்டுக் கழகம், மற்றும் நிந்தவூர் அல்அஸ்ரக் அல்மஸ்ஹர் மற்றும் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி (தேசிய பாடசாலை) ஆகியவற்றின் சுற்றாடல் கழகங்கள் ஆகியனவும் இந்த முயற்சிகளுக்கு உதவின.

சம்மாந்துறை கோல்டன் சிட்டியின் லயன்ஸ் கழகம் மற்றும் சாய்ந்தமருது லயன்ஸ் கழக உறுப்பினர்களும் இந்த முயற்சிக்கு தமது ஆதரவை வழங்கினர்.

இந்நிகழ்வு 2024 பெப்ரவரி 25 ஆம் திகதி காலை 6:30 மணிக்கு ஆரம்பமாகி 11:30 மணியளவில் நிந்தவூர் கடற்கரையில் நிறைவடைந்தது. பள்ளி மாணவர்கள் மற்றும் பெண்களின் குறிப்பிடத்தக்க ஈடுபாட்டுடன் சுமார் 400 நபர்கள் கடற்கரையை சுத்தம் செய்தனர்.

கல்முனை நகர லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்த 3வது கடற்கரையை சுத்தப்படுத்தும் திட்டம் இதுவாகும்.



# திண்மக் கழிவகற்றலை மேம்படுத்தல் கல்முனையில் விசேட கலந்துரையாடல்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகரில் திண்மக் கழிவகற்றல் சேவையை மேம்படுத்துவது தொடர்பாக கல்முனை மனிதவள அபிவிருத்தி அமைப்பு ஏற்பாடு செய்திருந்த விசேட கலந்துரையாடல் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் வியாழனன்று (29) நடைபெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி அவர்களின் முன்னிலையில் அமைப்பின் தலைவர் டொக்டர் எம்.எச். ரிஸ்பின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.பாயிஸ், கல்முனை ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி முர்ஷித் முப்தி, உப தலைவர் மௌலவி அப்துல் ஹமீட் உட்பட மனிதவள அபிவிருத்தி அமைப்பின் உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கல்முனை மாநகரம் திண்மக்கழிவகற்றல் செயல்பாடுகளில் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் மற்றும் சவால்கள் அதனை தீர்ப்பதற்கான வழிமுறைகள், கல்முனை மாநகர சபைக்கு பொது மக்கள் வழங்க வேண்டிய ஒத்துழைப்புகள், அதற்கான வழிகாட்டல்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலும் எதிர்காலத்தில் திண்மக்கழிவகற்றல் சேவையை வினைத்திறன் மிக்கதாக கட்டியெழுப்புவதற்கான மூலோபாயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

அதேவேளை கல்முனை மாநகர சபையை பொறுப்பேற்றது முதல் கடந்த ஒன்றரை வருட காலமாக வினைத்திறனுடன் நேர்த்தியான சேவைகளை வழங்கி வருகின்ற ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி அவர்களை கல்முனை மனிதவள அபிவிருத்தி அமைப்பு மற்றும் கல்முனை ஜம்இய்யத்துல் உலமா சபை என்பன இணைந்து நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவித்துள்ளன.

# சூரங்கல் கிராமத்தில் மா, மசாலா உற்பத்தி நிலையம் திறந்துவைப்பு



(ஹஸ்பர் ஏ.எச்)

பொருளாதார ரீதியாக நலிவடைந்தவர்களுக்கு அவர்களின் திறன்கள், அறிவு மற்றும் சாத்தியமான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் நிலையான வருமானத்தை வழங்குவதற்காக

கிண்ணியா சூரங்கல் கிராமத்தில் சூரா உற்பத்திகள் எனும் மா மற்றும் மசாலாத் தூள் உற்பத்தி நிலையம் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கனியினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது .

இந்நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், முஸ்லீம் எய்ட் நிகழ்ச்சித் தலைவர், முஸ்லீம் எய்ட் திட்ட உத்தியோகத்தர், மற்றும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இங்கு கருத்து தெரிவித்த கிண்ணியா பிரதேச செயலாளர், இவ்வாறான முயற்சிகளின் முக்கியத்துவத்தையும் தமது பொருளாதார அபிவிருத்திக்கான அதிகபட்ச நன்மைகளை பெறுவதற்கு பயனாளிகள் எவ்வாறு இச்செயற்றிட்டத்தில் பங்களித்து செயலூக்கத்துடன் பங்குகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

முஸ்லீம் எய்ட் ஸ்ரீலங்கா - திருகோணமலை மாவட்டத்தில் பொருளாதார ரீதியாக நலிவடைந்தவர்களுக்கு அவர்களின் திறன்கள், அறிவு மற்றும் சாத்தியமான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் நிலையான வருமானத்தை வழங்குவதற்காக பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

# TIN இலக்கங்களை பதிவு செய்வதில் இழுபறி மாற்றுத் திட்டங்களுக்கு யோசனை முன்வைப்பு

தேசிய அடையாள அட்டை இலக்கங்களை (TIN) வரி இலக்கமாக பயன்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், வழங்கப்பட்ட ஒன்பது இலட்சம் (900,000) (TIN) வரி இலக்கங்களை மாற்ற வேண்டியதன் அவசியத்தால் கடுமையான நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுவரும் தேசிய அடையாள அட்டை எண்ணை வரி இலக்கமாக பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்துவது குறித்து நிதிக்குழுவினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகள் அதிக கவனம் செலுத்தவில்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது.

எவ்வாறாயினும், தேசிய அடையாள அட்டை இலக்கத்தை மீண்டும் வரி இலக்கமாக பயன்படுத்த முன்மொழியப்பட்டுள்ள போதிலும், அதனை நடைமுறைப்படுத்துவதில் பல நெருக்கடி நிலைகள் ஏற்பட்டுள்ளதாக நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஒரே நபருக்கு பல இலக்கங்களை வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றன.

எவ்வாறாயினும், வரி இலக்கம் வழங்குவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக மார்ச் 31 ஆம் திகதி வரை அதனை நடைமுறைப்படுத்துவதை ஒத்திவைக்க அரசாங்கம் முடிவு செய்தது.

இதற்கமைய, கடந்த 26 பெப்ரவரி ஆம் திகதி வரை 109,000 இலக்கங்கள் வழங்குவது தடைப்பட்டதாகவும்,




இதன் காரணமாக ஏப்ரல் முதலாம் திகதி முதல் வரி இலக்கத்தை கட்டாயமாக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் உள்நாட்டு இறைவரி திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# பங்களாதேஷ் ரி-20 தொடருக்கான இலங்கை அணி நேற்று புறப்பட்டது

இலங்கைக் கிரிக்கெட் அணியின் பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தில் நடைபெறவுள்ள ரி-20 தொடரில் பங்கெடுக்கும் இலங்கை கிரிக்கெட் அணி நேற்று புறப்பட்டுச் சென்றுள்ளது.



பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணியானது அங்கே மூன்று வகை போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடர்களிலும் ஆடுகின்றது. இதில் முதலாவதாக இலங்கை - பங்களாதேஷ் அணிகள் பங்கெடுக்கும் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் நடைபெறவுள்ள நிலையில் இந்தத் தொடருக்கான இலங்கைக் குழாமே தற்போது அங்கு புறப்பட்டுச் சென்றுள்ளது.

இந்த இலங்கைக் குழாம் ஆப்கானிஸ்தான் ரி-20 தொடரில் ஆடிய வீரர்களோடும், ஆப்கான் தொடரில் உள்வாங்கப்படாதிருக்காத அவிஷ்க பெர்னாண்டோ, ஜெப்ரி வன்டர்செய் ஆகிய வீரர்களையும் உள்ளடக்கியதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆப்கான் ரி-20 தொடரின் மூன்றாவது போட்டியில் உபாதைக்குள்ளான ஆரம்பத்துடுப்பாட்டவீரரான பதும் நிஸஸங்க, பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தில் முன்னதாக உள்வாங்கப்பட்ட போதிலும் பூரண உடற்தகுதியினைப் பெறாத காரணத்தினால் பங்களாதேஷ் பயணமாகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதேவேளை பங்களாதேஷ் ரி-20 தொடரில் வனிந்து ஹஸரங்க அணித்தலைவராக பெயரிடப்பட்ட போதிலும் அவருக்கு இருக்கும் போட்டித்தடை காரணமாக தொடரின் முதல் இரண்டு போட்டிகளிலும் சரித் அசலன்க இலங்கை அணியினை வழிநடாத்துவார் எனக் கூறப்பட்டிருக்கின்றது.

இதற்கிடையில் பங்களாதேஷ் தொடருக்கான இலங்கை குழாம் நேற்று அதிகாலை புறப்பட்டுச்சென்ற நிலையில், குழாத்துடன் குசல் பெரேரா செல்லவில்லை. எனவே அவர் ரி-20 தொடரில் விளையாட மாட்டார் என தெரியவருகிறது. சுகயீனம் காரணமாக பங்களாதேஷ் தொடருக்கான குழாத்திலிருந்து அவர் விலகியதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

குசல் பெரேரா அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு பதிலாக மற்றுமொரு ஆரம்ப துடுப்பாட்ட வீரர் நிரோஷன் டிக்வெல்ல அணியில் இணைக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரின் போட்டிகள் அனைத்தும் சில்லேட் நகரில் வரும் 4, 6 மற்றும் 9ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

இலங்கை அணி விபரம் -

வனிந்து ஹஸரங்க (தலைவர்), சரித் அசலன்க (பிரதித் தலைவர்), குசல் மெண்டிஸ், சதீர சமரவிக்ரம, அஞ்செலோ மத்யூஸ், தசுன் ஷானக்க, மகேஷ் தீக்ஷன, தனஞ்சய டி சில்வா, டில்சான் மதுசங்க, நுவான் துஷார, மதீஷ பதிரன, அகில தனஞ்சய, பினுர பெனாண்டோ, கமிந்து மெண்டிஸ், அவிஷ்க பெர்னாண்டோ, ஜெப்ரி வன்டர்செய்



# விரைவில் வடக்குக் காசாவில் பஞ்சம் உலக உணவுத் திட்டம் எச்சரிக்கை!

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் நீடித்து வரும் நிலையில் விரைவில் வடக்குக் காசாவில் பஞ்சம் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

வடக்கு காசாவை உதவிகள் சென்றடைய விடாமல் இஸ்ரேலிய படைகள் தொடர்ந்து தடுத்து வருவதால் கடந்த ஜனவரி 23 ஆம் திகதி தொடக்கம் வடக்கு காசாவுக்கு உதவிகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் காசாவில் மனிதாபிமான நெருக்கடி மோசமடைந்திருப்பதாகவும் அதனை ஐநாவால் கையாள முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் காசாவுக்கான உதவிகள் தயார் நிலையில் எல்லையில் காத்திருப்பதாக ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.

# டாக்காவில் ஏழு மாடிக் கட்டிடத்தில் தீ 43 பேர் உடல் கருகி மரணம் - பலர் காயம்



*பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் ஏழு மாடிக் கட்டிடமொன்றில் நேற்றிரவு ஏற்பட்ட தீ விபத்தில் 43 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.*

*குறித்த கட்டிடத்தின் முதலாம் தளத்தில் உள்ள உணவகமொன்றில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாகவே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இத்தீவிபத்தில் 43 பேர் உயிரிழந்துள்ளதுடன் 22 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், அவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# போதைப்பொருள் தலைநகரமாக தமிழ்நாடு மாறியிருக்கிறது!

## கே. அண்ணாமலை குற்றச்சாட்டு



இந்திய நாட்டின் போதைப்பொருள் தலைநகரமாக தமிழ்நாடு மாறியிருக்கிறது என பாஜக தமிழ் மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எக்ஸ் வலைதள பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது-நாட்டின் போதைப்பொருள் தலைநகராக தமிழ்நாடு மாறியிருக்கிறது. போதைப்பொருள் கடத்தல் காரர்களின் புகலிடமாக மாநிலத்தை மாற்றியதற்காக திமுக அரசு வெட்கித் தலைகுனிய வேண்டும்..

சர்வதேச போதைப்பொருள் கடத்தல் கூட்டத்தின் தலைவனும், திமுக நிர்வாகியுமான ஜாபர் சாதிக் என்பவர் ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறார்.

திமுக நிர்வாகிகளின் நிறுவனங்களில் தேசிய போதைப் பொருள் கட்டுப்பாட்டு ஆணையம் சோதனை நடத்தி வருகிறது. தமிழகத்துக்குக் கடத்தப்படவிருந்த ரூ.1200 கோடி மதிப்புள்ள போதைப்பொருள்கள் குஜராத் கடற்பகுதியிலும், இன்று ரயிலில் கடத்தப்பட்ட 30 கிலோ மெத்தம்பேட்டமைன் போதைப்பொருள், போக்குவரத்து புலனாய்வு இயக்குநரகத்தால் பிடிப்பட்டுள்ளது.

ஜாபர் சாதிக்கின் பரவலான வலைப்பின்னல் அம்பலாகிக் கொண்டிருக்கும் வேளையில், இது குறித்து வாயே திறக்காமல் இருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் இனிமேலாவது விழித்துக்கொண்டு நடவடிக்கை எடுப்பாரா? அல்லது வழக்கம்போல மக்களின் கவனத்தை இதிலிருந்து முக்கியமற்ற பிரச்சனைகளுக்குத் திசைதிருப்ப, தனது கூட்டத்தை பயன்படுத்தப் போகிறாரா? என்று அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

# தேசியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களை கல்வி அதிகாரிகள் பாடசாலை சென்று வாழ்த்தினர்




(வி.ரி. சகாதேவராஜா)

தேசிய போட்டியில் வெற்றி பெற்ற சாதனை மாணவர்களை சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் கல்வி அதிகாரிகள் நேற்று பாடசாலைக்கு சென்று வாழ்த்தினார்கள்.

அகில இலங்கை தேசிய சமூக விஞ்ஞான போட்டி-2023 பெறுபேறுகள் நேற்று வெளியாகின. இதில் சம்மாந்துறை வலயத்தில் மூன்று மாணவர்கள் சாதனைபடைத்தனர்.

சம்மாந்துறை வலயத்தில் உள்ள மஜீத் புரம் மகா வித்தியாலய மாணவி கே.எம்.எவ். அசீமா (தரம்12/13), விவேகானந்த மகா வித்தியாலய மாணவி எஸ். குகதர்சனா (தரம்-9), இறக்காமம் அஷ்ரப் ம.கல்லூரி எம்.கே..யூசுப்சயான்(தரம்-7) ஆகியோர் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றுள்ளனர்.

அவர்களை குறித்தபாடசாலைக்குச்சென்று வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள் வாழ்த்தி கௌரவித்தார்கள்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.வை.அறபாத் எ.எல்.எம்.மஜீத் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். எல்.எம். நிஷார் ஆகியோர் அக்குழுவில் சென்றிருந்தனர்.

# கல்முனை கடற்கரை பள்ளிவாசலுக்கு அண்மித்த வீதி விசாலமாக்கி பிரதேசத்தை அழகுபடுத்த நடவடிக்கை

(நூருல்ஹுதா உமர்)

சர்வதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் புகழ்பெற்ற கல்முனை நாகூர் ஆண்டகை தர்கா ஷரீஃப் அமைந்துள்ள கல்முனை கடற்கரை பள்ளிவாசலுக்கு முன்னாள் அமைந்துள்ள கடற்கரை வீதி மக்களின் அதிக வருகை காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதையும், வெள்ளிக்கிழமைகளில் போக்குவரத்து ஸ்தம்பிதமடைவதையும் கவனத்தில் கொண்டு அந்த வீதியை விசாலமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தலைமையில் இந்த களவிஜயத்தில் கல்முனை மாநகர சபை ஆணையாளர் அஸ்மி ஆதம்லெப்பை, மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி, கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஏ. ஹலீலுர் ரஹ்மான், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர்கள் உட்பட கல்முனை மாநகர சபை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



இதன்போது குறித்த பிரதேசத்துக்கு விஜயம் செய்யும் பொதுமக்களின் வாகனங்களின் தரிப்பிடம் தொடர்பிலும் கவனம் செலுத்தியதுடன் குறித்த வீதியை விரிவாக்க தேவையான விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டதுடன் குறித்த பிரதேசத்தை மின்விளக்குகள் மற்றும் இருக்கை வசதிகளை கொண்டு அழகுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், தேவையான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. வேலைத்திட்டம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை கல்முனை மாநகர சபை முன்னெடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.







# காத்தான்குடி மில்லத் பெண்கள் கல்லூரிக்கு கணினி அறை

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கொமர்ஷல் வங்கியின் அறக்கட்டளை திட்டத்தின் கீழ் கணினிகள் மற்றும் தளபாடங்களை கையளிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் திருமதி ஜே.யூ.எம் ஜெஸீமா முஸம்மில் தலைமையில் இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக கொமர்ஷல் வங்கியின் கிழக்கு பிராந்திய முகாமையாளர் ராஜகுலசூரியர் கஜரூபன் கலந்துகொண்டார்.

கௌரவ அதிதிகளாக காத்தான்குடி கொமர்ஷல் வங்கி கிளையின் முகாமையாளர் லூயிஸ் கரோல்ட் ஜித்தேந்திரன், அக்கரைப்பற்று கொமர்ஷல் வங்கி கிளையின் முகாமையாளர் ஐ.எம் பாயிஸ், காத்தான்குடி கொமர்ஷல் வங்கி கிளையின் உதவி முகாமையாளர் எம்.என்.எம் ரிப்கி அவர்களும் விசேட அதிதியாக காத்தான்குடி பிரதேச கோட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஏ.ஜி.எம் ஹக்கீம் சேர் அவர்களும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவின் முன்னாள் செயலாளர் ஷாதுலி ஹாஜியார் அவர்களும் பழைய மாணவர் சங்க செயலாளர் திருமதி ஷகீலா அப்துர்ரஹ்மான் மற்றும் அதன் பொருளாளர் அஜ்மீர் அவர்களும், இத்திட்டத்தை எமது பாடசாலையில் செயற்படுத்த இணைப்பாளராக இருந்த எமது பாடசாலையின் பழைய மாணவர் எம். எம். பாமிக் அவர்களும் பாடசாலையின் பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

மேற்படி நிகழ்வில் 10 கம்ப்யூட்டர்களும் அதற்கான தளபாடங்களும் கொமர்ஷல் வங்கியின் அதிகாரிகளினால் பாடசாலையின் அதிபர் திருமதி ஜே.யு.எம் ஜெஸீமா முஸம்மில் அவர்களிடம் மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் சமையற் கலை தொடர்பான செயலமர்வு



(எம் எப் நவாஸ்)

எடின்பரோ நிறுவனத்தின் அனுசரணையோடு நாடு தழுவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள், அரச நிறுவனங்களின் பெண் ஊழியர்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியார் அமைப்புக்களை சேர்ந்தவர்களுக்காக சமையற்கலை தொடர்பான இலவச செயலமர்வுகளை நடாத்திவருகிறது.

அதற்கமைய அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று பிரதேச செயலாளர் பி ரீ எம். இர்பான் தலைமையில் இச்செயலமர்வு இடம்பெற்றது.

சமையற்கலை நிபுணர் எம்.எம்.ரிபாஸ் மற்றும் நிகழ்ச்சித் திட்ட தயாரிப்பாளர் எம் எஸ் எம்.றமீஸ் ஆகியோர் இதனை நெறிப்படுத்திருந்தனர்.

இச்செயலமர்வில் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபீர், பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனையவர்களும் கலந்து கொண்டனர்.

# நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தினையே எதிர்பார்த்துள்ளனர் என்கிறது ஜே.வி.பி.

நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை எதிர்ப்பார்த்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துகைகையில் இதனை குறிப்பிட்டார்.

அரசியலமைப்பின் பிரகாரம் நாட்டில் ஒக்டோபர் மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் நிச்சயமாக நடத்தப்பட வேண்டும்.

தேர்தலை அறிவிக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே உள்ளது. எனவே செப்டெம்பர் மாதத்தின் இறுதியில் அல்லது ஒக்டோபர் முதல் வாரத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

நாட்டு மக்கள் இன்று பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். மூன்று வேளை உணவு உட்கொள்ள முடியாதுள்ளனர்.

குறிப்பாக சிறுவர்கள் போஷாக்கு குறைப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர். அதேபோல் வரிகொள்கை காரணமாக நாட்டின் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மறுபுறம் மருந்து மோசடி இடம்பெறகின்றது. இவற்றை கடந்து மக்களுக்க சிறந்த வாழ்க்கை முறைமையை ஏற்படுத்த வேண்டும். நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தினையே எதிர்பார்த்துள்ளனர், எனவும் ரில்வின் சில்வா மேலும் குறிப்பிட்டார்.



# கடவுள் சிலையை திருடியவர் சீசீடிவியால் சிக்கினார்!

கத்தோலிக்க தேவாலயங்களில் நடைபெறும் கண்காட்சிகளுக்குச் சென்று அங்கு கடைகளில் உள்ள பொருட்களை திருடிய நபர் ஒருவரை நீர்கொழும்பு துங்கால்பிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் கையில் சிறு குழந்தையொன்றை சுமந்தவாறே இந்த திருட்டுக்களை செய்து வந்துள்ளார். தாம் பிடிபட்டால் யாரும் தன்னை தாக்கக்கூடாது என்பதுடன், அனைவரின் அனுதாபத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலேயே இவ்வாறு அவர் குழந்தையை சுமந்தவாறு திருட்டில் ஈடுபட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரவானதும் கோவில் வளாக கடைகள் மூடப்பட்ட பின்னர், அக்கடைகளின் கதவுகளை உடைத்து மிகக் கவனமாக உள்ளே நுழைந்து காணிக்கை பொருட்கள், கடவுள் சிலைகள், பணம் மற்றும் சமய புத்தகங்களை இவர் திருடி வந்துள்ளார். இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய சுற்றுவட்டார வீடுகளில் உள்ள சீசீடிவி கெமெராக்களை பொலிஸார் பரிசோதித்த போது குறித்த சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டதாக துங்கால்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரெப-72)






## அறிவுரைகளை புறக்கணித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!



(அஸ்ஹர் இப்றாஹிம்)


பொதுமக்களுக்கு சுகாதாரமானதும் தரமானதுமான உணவுகள் கிடைப்பதற்கு துறைசார்ந்த அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டிய அதே வேளை, சுகாதாரத் தரப்பினரால் வழங்கப்படும் அறிவுரைகளைப் புறக்கணித்து அலட்சியமாக செயற்படும் நிறுவனங்களுக்கும் உரிமையாளர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

உணவு விற்பனை செய்யும் மற்றும் அவற்றை கையாளும் நிறுவனங்களை மேற்பார்வை செய்வதன் நோக்கம் உணவின் தரம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்து பாதுகாப்பான உணவை வழுங்குவதற்காகும்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் உணவு நிறுவனங்களுக்குரிய சட்ட ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்காது நுகர்வோருக்கு தரமற்ற மற்றும் சுகாதாரமற்ற உணவுகளை வழங்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு எவரும் தயங்கக்கூடாது.

குறிப்பாக ரமழான் மாத காலப்பகுதியில் தற்காலிகமாக மற்றும் நடமாடும் உணவகங்கள் அமைகின்றன. இவ்வாறான உணவகங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தி அதன் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை அறிவுறுத்துவது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் கடமையாகும், என்று தெரிவித்தார்.

## காத்தான்குடி மத்திய கல்லூரிக்கு பௌத்த மத குரு விஜயம்



(எம்.எம்.றம்ஸீன்)

இன நல்லுறவு, மத நல்லிணக்கம் போன்ற செயற்பாடுகளில் அதிக ஈடுபாடு கொண்டவரும் நாடறிந்த சமூக செயற்பாட்டாளருமான பொஹவந்தலாவ ராகுல ஹிமி தேரர் புதன்கிழமை விசேட விஜயம் மேற்கொண்டு காத்தான்குடி மத்திய கல்லூரிக்கு வருகை தந்திருந்தார்.

இவரது வருகையை ஒட்டி விஷேட காலை ஒன்றுகூடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாடசாலையின் அதிபர் எம்.ஏ. நிஹால் அஹமட் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இக்காலை கூட்டத்தில் பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது தனது வாழ்க்கையில் கடந்து வந்த பாதைகள், தமிழ், முஸ்லிம் மக்களோடு தான் கொண்டுள்ள உறவு, இன, மத நல்லிணக்க பயணத்தில் மாணவர்களின் பங்கு போன்ற விடயங்களை முன்வைத்து தமிழில் விசேட உரை நிகழ்த்தியமை குறிப்பிட்டத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.03.2024 இல் வெளியிடப்பெற்றது.